# எரிசக்தித் துறை

## மானியக் கோரிக்கை எண்.14

### எரிசக்தித் துறை

### அறிவிப்புகள்
### 2018 - 2019

**பி.தங்கமணி**
**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2018

# எரிசக்தித் துறை

## அறிவிப்புகள் 2018-2019

1. **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நாமக்கல் மின் பகிர்மான** வட்டத்திற்கு **ரூ.4 கோடி மதிப்பீட்டில்** புதிய மத்திய **அலுவலகக் கட்டடம்** அமைக்கப்படும்.
2. **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** மயிலாப்பூர் 230 கி.வோ. துணை மின் நிலைய வளாகத்தில் **ரூ.16 கோடி செலவில்** ஒருங்கிணைந்த கணினி மின்தடை நீக்கும் மையம், ஸ்கேடா மையம், புதிதாக அமையவிருக்கும் மேற்பார்வை பொறியாளர் (சென்னை வளர்ச்சி வட்டம்/ திட்டங்கள்) அலுவலகம், தலைமைப் பொறியாளர் (மின்பகிர்மானம்/வடக்கு) அலுவலகம் மற்றும் மேற்பார்வை பொறியாளர் (சென்னை வளர்ச்சி வட்டம்) அலுவலகம் ஆகியவற்றிற்கான **புதிய கட்டடம்** அமைக்கப்படும்.
3. **நேரடி பணி நியமனம்**

**அ)** **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, **கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு** மண்டலத்திற்கு மொத்தம் **1000 கள உதவியாளர்** மற்றும் **பிற மண்டலங்களுக்கு 1000 கள உதவியாளர்** பதவிகளுக்கான தகுதியான நபர்கள் வெளிப்படையான (Transparent) முறையில் எழுத்து தேர்வு மூலமாக தேர்வு செய்யப்பட்டு, எழுத்து தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இன, இட ஒதுக்கீடு அடிப்படையில், **நேரடி பணி நியமனம்** செய்யப்படுவார்கள்.

ஆ) **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 150 உதவி பொறியாளர் (மின்னியல்), 25 உதவி பொறியாளர் (சிவில்), 25 உதவி பொறியாளர் (இயந்திரவியல்) மற்றும் 250 இளநிலை உதவியாளர் (கணக்கு) பதவிகளுக்கான தகுதியான நபர்கள் வெளிப்படையான (Transparent) முறையில் எழுத்து தேர்வு மூலமாக தேர்வு செய்யப்பட்டு, எழுத்து தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இன, இட ஒதுக்கீடு அடிப்படையில் **நேரடி பணி நியமனம்** செய்யப்படுவார்கள்.

4. **புதிய மின் பகிர்மான வட்டம் மற்றும் கோட்டம் உருவாக்குதல்.**

அ) **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டத்தை இரண்டாக பிரித்து, **ரூபாய் 8.77 கோடி** மதிப்பீட்டில் **ஆரணியில் புதிய வட்டம்** அமைக்கப்படும்.

ஆ) **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, மேற்பார்வை பொறியாளர் **(சென்னை வளர்ச்சி வட்டம்/ திட்டங்கள்)** என்ற ஒரு **புதிய வட்டம்** சென்னையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணிக்க **ரூபாய் 4.31 கோடி** மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

இ) **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, அதிகமான மின் பகிர்மான கட்டமைப்பை கொண்டுள்ள உதகமண்டல மின் பகிர்மான கோட்டத்தை இரண்டாக பிரித்து, **கூடலூரை தலைமையிடமாகக் கொண்டு** ஒரு புதிய மின் **பகிர்மான கோட்டம் ரூபாய் 1.83 கோடி மதிப்பீட்டில்** அமைக்கப்படும்.

ஈ) **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, தாம்பரம் மின் பகிர்மான கோட்டத்தை இரண்டாக பிரித்து, **பல்லாவரத்தை தலைமையிடமாகக் கொண்டு** ஒரு புதிய மின் **பகிர்மான கோட்டம் ரூபாய் 1.83 கோடி மதிப்பீட்டில்** அமைக்கப்படும்.

**உ)** பத்திற்கும் மேற்பட்ட பழைய புனல் மின் நிலையங்களின் ஆயுட்காலத்தை மேலும் 25 ஆண்டுகள் நீட்டித்து நிறுவு திறனை மேம்படுத்தும் வேலைகளை (Renovation, Modernisation and Uprating) செவ்வனே மேற்கொள்ள, மேற்பார்வை பொறியாளர் (புனல்/ சீரமைத்தல், நவீன மயமாக்கல் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்துதல் (RMU)) கோயம்புத்தூர் கட்டுப்பாட்டில் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூபாய் 1.75 கோடி** வருடாந்திர செலவில் **கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்கள்** உருவாக்கப்படும்.

5. **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, விவசாய மின் இணைப்பு பெற காத்திருப்பு பட்டியலிலுள்ள விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் விரைந்து விவசாய மின் இணைப்பைப் பெறும் வகையில் விரைவு (தட்கல்) மின்னிணைப்பு வழங்கல் திட்டத்தின் மூலம் 5 குதிரைத்திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், 7.5 குதிரைத்திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம், 10 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் மூன்று இலட்சம் மற்றும் 15 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் நான்கு இலட்சம் வீதம் ஒரு முறை கட்டணம் செலுத்தும் 10,000 விண்ணப்பதாரர்களுக்கு இந்த வருடமும் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்படும்.

**6. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, மாநிலத்தின் பின் தங்கிய கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காக, குறைந்தப்பட்சமாக 20 மெகா வாட் நிறுவு திறன் கொண்ட சிறிய கிராமப்புற சூரிய பூங்காக்களை அமைப்பதற்கான மாநில முகமை நிறுவனமாக, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை திகழும். இத்திட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு, குறைந்தபட்சம் ஒரு ஏக்கருக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.10,000/– வீதம் வருவாய் கிடைக்கப்பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**7. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, மாநிலத்திலுள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு, அதிக அளவில் வருமானம் ஈட்டும் தொழில் முனைவோருக்குரிய வாய்ப்புகளை உருவாக்கித்தருவதற்கும், வேலையில்லா இளைஞர்கள் ஒரு மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தி மின் நிலையங்களை நிறுவுவதற்கும், தேவையான ஊக்கம் மற்றும் வசதிகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து கொடுக்கும்.

**8. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, மின்சார உற்பத்தியின் பொருளாதார நன்மைகளை விவசாயிகளுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும், அவர்களின் வருமானத்தை மேம்படுத்தவும், எரிசக்தித் திறனை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையானது விவசாயிகள் தங்களது சொந்த நிலத்தில் சூரிய மின் உற்பத்தி செய்து அதனைத் தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் இதர தேவைப்படுவோருக்கும் விற்பனை செய்வதற்கும் தேவையான ஊக்கத்தையும், உதவிகளையும் செய்யும்.

**9. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்க, சொந்த நிலங்களை உடைய பல்கலைக்கழகங்கள், அறக்கட்டளை நிறுவனங்கள், அறக்கட்டளைகள் மற்றும் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சங்கங்கள் ஒவ்வொன்றும் அதிகபட்சம் 5 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட சூரிய சக்தி மின் நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்படுவர்.

**10. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, சூரிய எரிசக்திக் கொள்கையில் அறிவித்துள்ளபடி தெரு விளக்குகளை மின்னூட்டுதல் மற்றும் சூரிய எரிசக்தி மூலம் இயங்கும் நீர் இரைப்பான்கள், அரசு கட்டடங்களின் மேற்கூரையில் நிறுவப்படும் சூரிய அமைப்புகளுக்கு உத்வேகம் அளிக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, தமிழ்நாடு வெளிப்படை தன்மை சட்டத்தின் கீழ் மாநில முகமையாக விளங்கும் மற்றும் அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், சங்கங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேவை நிறுவனமாக செயல்படும். இந்த நோக்கத்திற்காக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஒரு சிறப்பு நோக்கு அமைப்பாக செயல்படுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

**பி.தங்கமணி**
**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**